கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

அசல் வழக்கு எண்.4/2016

பி.வா.சா. –1– கலையரசி

நாள். 14.03.2025

<u>பி.வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

07.12.1976 ஆம் தேதிய பாக பரிவினை பத்திரத்தில் கண்டுள்ள விபரங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி பாகபிரிவினை பத்திரத்தில் அழகியனகவுண்டர் அவரின் 2 மக்களான நாச்சிமுத்து மற்றும் சின்னச்சாமி ஆகியோர்கள் 1வது பார்ட்டியாக காட்டப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். ஆறுமுக கவுண்டர் என்பவர் 2வது பார்ட்டியாக காட்டப்பட்டுள்ளார் என்றால் சரிதான். ஆறுமுக கவுண்டரின் மூத்த மனைவி நல்லம்மாளும், அவரின் மகன் 1ஆம் பிரதிவாதி முத்துச்சாமி ஆகியோர்கள் 3வது பார்ட்டியாக காட்டப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். ஆறுமுக கவுண்டரின் இளைய மனைவி மீனாட்சியம்மாளின் மகன் 1ஆம் வாதி சண்முகம் என்ற ராஜன்னா என்பவர் 4வது பார்ட்டியாக காட்டப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் அழகியனகவுண்டர் மற்றும் நாச்சிமுத்து, சின்னாசாமி ஆகியோர்களுக்கு ஏ பட்டியலாக சொத்துக்கல் ஒதுக்கப்பட்டுள்ளன என்றால் சரிதான். ஆறுமுக கவுடருக்கு பி பட்டியல் சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆறுமுக கவுடரின் மூத்த மனைவி நல்லமாள் என்பவருக்கும் அவரின் மகன் 1ஆம் பிரதிவாதி முத்துச்சாமிக்கு சி பட்டியல் சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆறுமுக கவுண்டரின் இளைய மனைவி மீனாட்சியம்மாளின் மகன் 1ஆம் வாதிக்கும் டி பட்டியல் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகள் ஆறுமுக கவுண்டருக்கு கிடைக்க பெற்ற பி பட்டியல் சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். ஆறுமுக கவுண்டருக்கு கிடைக்க பெற்ற பி பட்டியல் சொத்தை பொறுத்து வாதிகள் 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் மீது அவர்களுக்குள்ள 6ல் 3 பங்கு பாகத்தை நயமிடர் பாகத்து பிரித்து தனித்து சுவாதீனம் கொடுக்க வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பட்டியலில் உள்ள சொத்துக்களில் யார் யாருக்கு எவ்வளவு சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்றும், அதன் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் மற்றும் நான்குமால்களின் விபரம் தெரியுமா என்றால் எவ்வளவு சொத்துக்கள் கொடுத்துள்ளார்கள் என்ற விபரம் தெரியும் சர்வே எண்கள் தெரியாது. நான் தாக்கல் செய்த எதிருரையில் ஆறுமுக கவுண்டர் உயிருடன் இருந்த காலத்திலேயே மூத்த மனைவிக்கும், இளைய மனைவிக்கும் பிறந்த பெண் மக்களுக்கு நல்ல முறையில் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். நான்

எனது எதிர்வழக்குரையில் 1ஆம் வாதி ஓசூரில் வசித்து வருவதாகவும் அங்கு லேவா தொழில் செய்து வருவதாக குறிபிட்டுள்ளேன் மேற்படி விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். மேற்படி 1ஆம் வாதியின் ஆதார் கார்டை நான் பார்த்துள்ளேன். மேற்படி விபரங்கள் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் பெயர் தங்கவேல். எனக்கு சுமார் 40 வருடங்களுக்கு முன்பு திருமணமாகியது. எனது கணவர் தமிழ்நாடு அரசு வனத்துறையில் வன அலுவலராக வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். எனது கணவர் பணியில் இருக்கும் போது 28.12.2001 ல் ஓய்வு பெறுவதற்கு முன்பே இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் இறப்பிற்கு முன்பு வன ரென்ஜராக பதவி உயர்வு பெற்ற பின்னர் தான் இறந்தார் என்றால் சரிதான். எனக்கு 2 பெண் குழந்தைகள் என்றால் சரிதான். எனது மூத்த மகள் பெயர் ஜெயராணி, இளைய மகள் பெயர் பானுபிரியா என்றால் சரிதான். மேற்படி பானுபிரியா என்பவர் தான் வழக்கில் 3 பிரதிவாதி என்றால் சரிதான். எனது மூத்த மகளுக்கு 2006 ல் கோயம்புத்தூரில் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். இளைய மகள் பானுபிரியா 3 ஆம் பிரதிவாதிக்கு 2021 ஆம் ஆண்டு வெளிநாட்டில் USA வில் திருமணம் நடைபெற்றது. மேற்படி திருமணத்திற்கு நான் USA விற்கு போனேன். இளைய மகள் பானுபிரியாவிற்கு திருமணமாகிய விபரம் தெரியாது, நான் அந்த நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. எனது இளைய மகள் 3 ஆம்பிரதிவாதி திண்டுக்கல் சௌந்தர ராஜாவித்யாலையா பள்ளியில் 8 வகுப்பு 2001 ல் படித்த போது எனது கணவர் இறந்துவிட்டார். 2005 ஆம் ஆண்டு எனது இளைய மகள் 10 வகுப்பு படித்தார்கள், 12 வகுப்பு 2010 ல் படித்தார்கள், நந்தா எஞ்ஜினியர்ங் கல்லூரி திண்டலில் படித்து முடித்தார்கள் எந்த வருடம் கல்லூரி படிப்பை படித்து முடித்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. கல்லூரி படிப்பை கல்லூரி விடுதியில் தங்கி படித்து வந்தார் என்றால் சரிதான். எனது கணவர் இறப்பிற்கு பிறகு நான் பென்சன் வங்கி வருகிறேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.3 எழுதும் சமயத்தில் எனது மகள் 3 ஆம் பிரதிவாதி உடன் இருந்தாரா என்றால் உடன் இருந்தார். மேற்படி பி.வா.சா.ஆ.3 எழுதும் சமயத்தில் 3 ஆம் பிரதிவாதி உடன் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 எனது தகப்பனார் எனது இளைய மகள் 3 ஆம் பிரதிவாதிக்கு எழுதி வைத்துள்ளார். மேற்படி ஆவணத்தில் எனது தகப்பனாருக்கு 77 வயது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் நான் ஆர்.எம் காலனி H 39, திண்டுக்கல் என்று முகவரி குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 2 வது சாட்சி கையொப்பம் செய்தவர் யார் என்று தெரியாது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் எனது மூத்த மகள் ஜெயராணி என்பவரை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் RM காலனியில் 2015 – 2016 ல் வேலை செய்த போது குடியிருந்தோம். RM காலனியில் குடியிருந்து வந்தது எங்களது சொந்த வீடு என்றால் சரிதான். மற்றொரு

வீடும் என் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டை வாடகைக்கு விட்டுள்ளோம் என்றால் சரிதான். வேடசந்தூர் – மாரம்பாடி செல்லும் ரோட்டில் எனது பேரில் சுமார் 59 செண்டு நிலம் உள்ளது என்றால் சரிதான். வேடசந்தூர் கிராமத்தில் பட்டா எண்.105 க்கு கட்டுப்பட்ட பல சர்வே எண்ணில் கட்டுப்பட்ட 21 ஏக்கர் 88 செண்டு நிலம் உள்ளது என்றால் சரிதான். எனது இளைய மகள் 3 ஆம் பிரதிவாதியின் கணவர் என்ன வேலை பார்க்கிறார் என்ற விபரம் தெரியாது என்றால் சரியல்ல. அவர் மென்பொறியாளர் வேலை செய்து வருகிறார். எனது இளைய மகள் 3 ஆம் பிரதிவாதிக்கும் எனக்கும் 2018 முதல் இன்று வரை பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரியல்ல. வாதிகள் எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்த நிலையில் 2022 ஆம் வருடம் புரோக்கர் மூலம் விலை பேசினோம் என்றால் சரியல்ல. எனது மூத்த மகள் தற்சமயம் அமெரிக்காவில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். 2009 ல் எனது மூத்த மகளின் தலைபிரசவத்திற்கு நான் அமெரிக்கா சென்றேன் என்றால் சரிதான். ஆறுமுக கவுண்டர் எனது தகப்பனார் 22.11.2011 அன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் இறப்பின் போது வயது 90 என்றால் சரியல்ல. வாதி தரப்பில் தாக்கல் செய்த வா.சா.ஆ.3 இறப்பு சான்றிதழ் பொய்யான அறிக்கை என்று எதிர்மனுவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய தகப்பனார் நான் வசித்து வரும் சீத்தபட்டியில் இறந்துவிட்டார். மேற்படி ஆறுமுக கவுண்டர் சீத்தப்பட்டியில் இறந்தார் என்ற வகைக்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எனது எதிருரையில் ஆறுமுக கவுண்டர் வாதியின் பராமரிப்பில் இல்லை என்பதை குறித்து ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆறுமுக கவுண்டரின் இறப்பு சான்றிதழின் படி தோப்புபட்டியில் இருந்த 1 வாதிக்கு பாத்தியபட்ட வீட்டில் தான் இறந்தார் என்றால் சரியல்ல. தோப்புபட்டியில் இருந்த தோட்டத்து வீட்டின் சர்வே எண்.40 அல்லது 41 ஆகும். எனது எதிருரையில் சொல்லியுள்ளது போல் நானும் எனது மகள் 3 பிரதிவாதியும் சேர்ந்து ஆறுமுக கவுண்டரின் இறப்பின் போது ரூ.50,000/– வரை செலவழித்தோம் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் ஆறுமுக கவுண்டர் உயிருடன் இருந்த வரையில் யாருக்கும் உயில் எழுதி வைக்கவில்லை என்றாலும், அவ்வாறு எண்ணம் இல்லை என்றாலும் சரியல்ல. அவ்வாறு உயில் எழுதி வைக்க வேண்டிய அவசியம் எனது இரண்டு மகள்களுக்கும் எழுதிக்கொடுத்திருப்பார் என்றும், அதை தவிர்த்து என் இளைய மகளுக்கு மட்டுமே எழுதி கொடுத்துள்ளார் என்றும், மேற்படி உயிலானது நம்பும் படியாக இல்லை என்றால் சரியல்ல. மேற்படி உயிலானது தற்போது வரை எவ்வித ஊர்ஜிததிற்கும் வரவில்லை என்றால் சரியல்ல. மேற்படி உயில் ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்திருப்பதால் மேற்படி ஆவணத்தின் பேரில் சொத்துக்கு உரிமை கொண்டாட எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. ஆறுமுக கவுண்டருக்கும் 1976 பாகத்தின் படி பாத்தியப்பட்ட சொத்துககளை மேற்படி ஆறுமுக

கவுண்டரின் முதல் தாரம், இரண்டாம் தாரம் மூலமாக பிறந்த வாரிசுகள் அனைவரும் கூட்டாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. ஆறுமுக கவுண்டரின் சொத்தை அபகரிக்கு நோக்கில் எனக்கு வேண்டியவர்களை வைத்து தாவா உயில் பத்திரத்தை பி.வா.சா.3 ஆவணத்தை உற்பத்தி செய்தோம் என்றால் சரியல்ல. வாதிகள் 2015 வருடதிலேயே ஆறுமுக கவுண்டரின் வாரிசுகளான வாதிகள் 1,2 பிரதிவாதிகள் அவருக்கு உரிய பங்கினை கேட்டு காலம் கடத்தி வந்ததால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் என்றால் சரியல்ல. ஆறுமுக கவுண்டர் உயிருடன் இருந்த காலத்திலேயோ அவருக்கு பாகத்தின் மூலம் கிடைக்க பெற்ற சொத்துக்களை அவரது வாரிசுகள் சரிசமமாக பிரித்து அனுபவிக்க சொன்னார் என்றால் சரியல்ல. ஆறுமுக கவுண்டர் வயது மூப்பின் காரணமாக அவர் சுயபுத்தியில்லாமலும், தெளிவான பார்வையில்லாமலும் உயில் எழுதி வைக்க வேண்டிய மனநிலையில்லாமலும், இருந்தார் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்த எதிருரையில் சொல்லியுள்ள விபரம் பொய் என்றாலும், இந்த வழக்கை பொறுத்து வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.03.14 17:54:43 +0530

Additional District Judge(FAC),

Dindigul.